பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
23 03 2026 MONDAY 7 15 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மேற்காசிய பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும், அமைதியான முறையில் தீர்வு காண வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. துறைமுகம் சார்ந்த வளர்ச்சிப் பணிகளுக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்

3. அஸ்ஸாம், கேரளம், புதுச்சேரி சட்டப்பேரவைக்கு அடுத்த மாதம் 9 ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

4. உத்தரபிரதேசத்தில் சேமிப்பு கிடங்கின் மேற்கூரை இடிந்து விழுந்ததில், 4 பேர் உயிரிழந்தனர், 12 பேர் காயமடைந்தனர்.

5. ஐசிசி-யின் கடந்த மாதத்திற்கான சிறந்த ஆட்டக்காரர் விருது, மகளிர் பிரிவில் இந்தியாவின் Arundhati Reddy-க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மேற்காசிய பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும், அமைதியான முறையில் தீர்வு காண வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் இப்பிரச்சினை குறித்து உரையாற்றுகையில், அவர் இவ்வாறு கூறினார்.

பதற்றத்தை தணிப்பதற்கும், பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்தியா ஆதரவு அளிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

மேற்காசியாவில் நிலவும் சூழ்நிலை கவலை அளிப்பதாக கூறிய அவர், அங்கு ஒரு கோடிக்கும் மேற்பட்ட இந்தியர்கள் வசித்து வருவதாக குறிப்பிட்டார்.

இப்பிரச்சினை தொடர்பாக மத்திய அமைச்சர்கள் திரு. ஜெய்சங்கர், திரு. ஹர்தீப் சிங் புரி ஆகியோர் மக்களவையில் ஏற்கனவே விரிவாக எடுத்துரைத்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பிரச்சினை காரணமாக, பெட்ரோலிய பொருட்கள் மற்றும் சமையல் எரிவாயு விநியோகம் பாதிக்கப்படக்கூடாது என்பதில் தமது அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதுவரை 3 லட்சத்து 70 ஆயிரத்திற்கும்மேற்பட்ட இந்தியர்கள் அப்பகுதியிலிருந்து அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதிகரித்து வரும் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக, மாற்று எரிசக்தி பயன்பாட்டிற்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மேற்காசியாவில் நிலவும் சூழ்நிலையை கண்காணிப்பதற்கென, அமைச்சர்களுக்கு இடையேயான குழு ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக, உணவு அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் அத்தியாவசிய பொருட்கள் தடையின்றி விநியோகம் செய்யப்படுவதை இந்தக் குழு கண்காணிக்கும் என்றார்.

பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்தும் இந்த குழு ஆய்வு செய்யும் என்று அவர் கூறினார்.

விவசாயிகளுக்கு உரங்கள் தடையின்றி விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்யுமாறு பிரதமர் அறிவுறுத்தியிருப்பதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

நாட்டு நலனை மட்டுமே கருத்தில் கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் தலைவராக அதிக நாட்கள் பணிபுரிந்தவர் என்ற சாதனையை பிரதமர் படைத்திருப்பதாக கூறினார்.

குஜராத் முதலமைச்சராகவும், பிரதமராகவும் 8 ஆயிரத்து 931 நாட்களை திரு. நரேந்திர மோடி நிறைவு செய்துள்ளது சாதனை என்றும் அவர் தெரிவித்தார்.

விடுமுறையின்றி திரு. நரேந்திர மோடி பணியாற்றி வருவதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறினார்.

>>>>>><<<<<<

துறைமுகம் சார்ந்த வளர்ச்சிப் பணிகளுக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

இன்று விசாகப்பட்டினத்தில் மிகப் பெரிய அளவிலான வர்த்தக வளாகத்தை திறந்து வைத்து அவர் பேசினார்.

விசாகப்பட்டினம் துறைமுக ஆணையத்திற்கு சொந்தமான நிலத்தில் இந்த வளாகம் கட்டப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

கனிம வளங்களை பாதுகாப்பதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாக நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டின் வளர்ச்சியில் கனிம வளங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக குறிப்பிட்டார்.

தேசிய அரியவகை கனிமங்கள் இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

>>>>>><<<<<<

ஊரக வளர்ச்சித்துறையின் நிர்வாக செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில், உள் தணிக்கைக்கான இணையதளத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

தணிக்கை நடவடிக்கைகளை நவீனப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஊரக வளர்ச்சித்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்கு இது உதவிடும் என்றும் இதன்மூலம் சேவை மேம்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

*அஸ்ஸாம், கேரளம், புதுச்சேரி சட்டப்பேரவைக்கு அடுத்த மாதம் 9 ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.*

*மனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறும்.*

*மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் 26ஆம் தேதி கடைசி நாளாகும்.*

*வாக்கு எண்ணிக்கை மே மாதம் 4-ஆம் தேதி நடைபெறும்.*

*>>>>>><<<<<<*

*கேரள சட்டப்பேரவை தேர்தலில் வாக்குப்பதிவு சதவீதத்தை அதிகரிக்கும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தலைமை தேர்தல் அதிகாரி திரு. Ratan Kelkar கூறியுள்ளார்.*

*இன்று திருவனந்தபுரத்தில் பத்திரிகை தகவல் அலுவலகத்தில் தேர்தல் தொடர்பான புத்தகத்தை வெளியிட்டு அவர் பேசினார்.*

*கடந்த சட்டப்பேரவை தேர்தலில் 75 சதவீத வாக்குகள் பதிவானதை அவர் சுட்டிக்காட்டினார்.*

*இந்த தேர்தலில் 85 சதவீதத்திற்கும் கூடுதலாக வாக்குப்பதிவு இருக்க வேண்டும் என்ற நோக்கில் தேர்தல் ஆணையம் செயல்பட்டு வருவதாகவும் திரு. Ratan Kelkar கூறினார்.*

*>>>>>><<<<<<*

*சிக்கிம் உள்ளாட்சித் தேர்தல் அடுத்த மாதம் 24ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இன்று கேங்டாக்கில் செய்தியாளர்களிடம் பேசிய மாநில தேர்தல் ஆணையர் திரு. K.C. Lepcha, இதற்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியதாக அவர் கூறினார்.*

*வேட்புமனுக்களை தாக்கல் செய்ய வரும் 30ஆம் தேதி கடைசி நாளாகும் என்றும், அதற்கு மறுநாள் மனுக்கள் மீதான பரிசீலனை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.*

*வாக்கு எண்ணிண்கை அடுத்த மாதம் 25ஆம் தேதி நடைபெறும் என்றும் அவர் கூறினார்.*

தேர்தல்நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்துள்ளதாகவும் திரு. K.C. Lepcha தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஜம்மு கஷ்மீரில் தீவிரவாத தாக்குதலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கான பணிநியமன ஆணைகளை துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா இன்று வழங்கினார்.

ஜம்முவில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நலனில் அரசு உறுதியுடன் இருப்பதாக கூறினார்.

>>>>>><<<<<<

பீகாரில், 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.

இந்த தேர்வில் 85 புள்ளி ஒன்று ஒன்பது சதவீதம் பேர் வெற்றிபெற்றுள்ளனர்.

இதில் மாணவிகளின் தேர்ச்சி விகிதம் 86 புள்ளி இரண்டு மூன்று சதவீதமாகவும், மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 84 புள்ளி பூஜ்யம் ஒன்பது சதவீதமாகவும் உள்ளது.

>>>>>><<<<<<

உத்தரபிரதேசத்தில் சேமிப்பு கிடங்கின் மேற்கூரை இடிந்து விழுந்ததில், 4 பேர் உயிரிழந்தனர், 12 பேர் காயமடைந்தனர்.

பிரயாக்ராஜ் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள சேமிப்பு கிடங்கில் இன்று பிற்பகல் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாவட்ட காவல்துறையினர் தெரிவித்தனர்.

இடிபாடுகளுக்கு இடையே சிக்கிய 14 பேர் மீட்கப்பட்டதாகவும், மேலும் சிலரை மீட்கும் பணி நடைபெற்று வருவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த சம்பவம் குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவி அறிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

தில்லியில் தீ விபத்துகளை தடுப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சர் திரு. Ashish Sood கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தீ விபத்து ஏற்பட்டால் பாதிப்புகளை தடுப்பதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்வதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஜார்க்கண்டில் சுகாதார கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில சுகாதாரத்துறை செயலர் திரு. அஜய்குமார் சிங் கூறியுள்ளார்.

ராஞ்சியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அரசு மருத்துவமனைகளில் அதிநவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

>>>>>><<<<<<

கேரளாவில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

பாலக்காடு மாவட்டம், Paruthipulli -யில் இருசக்கர வாகனம் கட்டுபாட்டை இழந்து, வீட்டின் சுவர் மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

அமெரிக்காவில் நேரிட்ட விமான விபத்தில் 2 விமானிகள் உயிரிழந்தனர்.

நியூயார்க் விமான நிலையத்தில் ஏர் கனடா விமானம் தரையிறங்கிய போது, இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

விமான தரையிறங்கும்போது, அப்பகுதியில் நின்று கொண்டிருந்த வாகனத்தின்மீது மோதியதாகவும், இதுகுறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

*ஐசிசி-யின் கடந்த மாதத்திற்கான சிறந்த ஆட்டக்காரர் விருது, மகளிர் பிரிவில் இந்தியாவின் Arundhati Reddy-க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.*

*ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டித் தொடரில் சிறப்பாக ஆடியதை அடுத்து, அவருக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*ஆசிய கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் Raj Kaur காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின், தகுதிச் சுற்றில் பெற்ற கூடுதல் புள்ளிகள் அடிப்படையில் அவர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றார்.*

*Chikitha, Swati, Tejal-ம் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.*

*மகளிர் மற்றும் கலப்பு குழுவிலும் இந்தியா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>>><<<<<<*

*ஆசிய குழு ஸ்குவாஷ் சாம்பியன் போட்டி ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இஸ்லாமாபாதில் அடுத்த மாதம் 14ஆம் தேதி தொடங்கி. 18ஆம் தேதிவரை நடைபெறவிருந்த போட்டி, வளைகுடா நாடுகளில் நிலவும் சூழ்நிலை காரணமாக ஒத்தி வைக்கப்படுவதாக ஆசிய ஸ்குவாஷ் சம்மேளனம் கூறியுள்ளது.*

***>>>>>>END<<<<<<***